සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ඉතිහාසය II (I කොටස)
வரலாறு II (பகுதி I)
History II (Part I)

**25-A T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1206 வரை**

சுட்டெண்: ..................................

**அறிவுறுத்தல்கள்:**

- ※ இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
- ※ ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, பின் அதனை இப்பத்திரத்திலேயே **அறிவுறுத்தல்களுக்கமையக் குறிப்பிடுக.**
- ※ இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
- ※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது **பகுதி I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் **பகுதி II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

- **1 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** இடுக.

**1.** (1) கிர்தார் (2) சுலைமான் (3) இந்துகுஷ்
(4) நீலகிரி (5) காரக்கோரம் (.........)

**2.** (1) கிருஷ்ணா (2) காவேரி (3) மகாநதி
(4) சிந்து (5) கோதாவரி (.........)

**3.** (1) புரு (2) யது (3) துர்வாச
(4) அணு (5) தஸ்யு (.........)

**4.** (1) கிரேக்கர் (2) சகர் (3) குஷாணர்
(4) சுங்கர் (5) பாலவர் (.........)

**5.** (1) ஆர்யதேவ (2) அஸ்வகோஷ (3) நாகர்ஜுன
(4) வசுமித்ர (5) வசுபந்து (.........)

**6.** (1) உஜ்ஜைனி (2) சுவர்ணகிரி (3) தக்ஷசீலம்
(4) தோசலி (5) கலிங்கம் (.........)

**7.** (1) பாடலிபுத்திர (2) தாம்ரலிப்தி (3) கல்யாணி
(4) சுப்பாரக (5) பாருகச்ச (.........)

**8.** (1) சாகுந்தல (2) மேகதூத (3) ஹர்ஷசரித
(4) விக்ரமோர்வசி (5) ரகுவம்ச (.........)

**9.** (1) மகேந்திரவர்மன் (2) வரகுணவர்மன் (3) நரசிம்மவர்மன்
(4) பரமேஸ்வரவர்மன் (5) நந்திவர்மன் (.........)

**10.** (1) சேரர் (2) சோழர் (3) பாண்டியர்
(4) பிரதிஹாரர் (5) பல்லவர் (.........)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) சாக்கிய - கபிலவஸ்து
(2) வுலி - மிதிலை
(3) வக்க - சும்சுமாரகிரி
(4) கோலிய - ராமகாம
(5) காலம - கேசபுத்த (.........)

**12.** (1) அஜந்தா - சுவரோவியங்கள்
(2) சாஞ்சி - தூபி
(3) மாமல்லபுரம் - பல்லவரின் ரதங்கள்
(4) ஒரிஸா - லிங்கராஜர் கோயில்
(5) மதுரா - குகைக் கோயில்கள் (.........)

**13.** (1) கௌடில்யர் - அர்த்தசாஸ்திரம்
(2) சூத்ரக - மிருச்சகடிக
(3) ஹர்ஷவர்த்தன - ஹர்ஷசரித
(4) பில்ஹனர் - விக்ரமாங்கதேவ சரிதம்
(5) கல்ஹனர் - ராஜதரங்கினி (.........)

**14.** (1) பரமாரர் - மால்வா
(2) பாலர் - வங்காளம்
(3) சாளுக்கியர் - வாதாமி
(4) தோமரர் - கன்னோசி
(5) சந்தெலா - வுண்டல்காண்ட் (.........)

**15.** (1) தமன - எரந்தபல்ல
(2) மகேந்திரர் - கோசல
(3) ஹஸ்திவர்மன் - காஞ்சி
(4) வியாக்ரராஜ - மஹாகாந்தார
(5) சுவாமிதத்த - கொட்டூர (.........)

- **16 - 20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | சோம | A | வேதங்கள் |
| (ii) | சபா | B | ஒரு பரிசுத்த பானம் |
| (iii) | சதி | C | ஆரியரல்லாத ஓர் இனக்குழு |
| (iv) | பணி | D | விதவைகள் உயிர்நீத்தல் |
| (v) | சுருதி | E | முதியோர் சபை |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | தோரமான | A | தக்ஷசீலத்து முதலாவது சக அரசன் |
| (ii) | அலெக்சாந்தர் | B | வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்றிய மாசிடோனிய மன்னர் |
| (iii) | மாவுஸ் | C | இந்தியாவின் முதலாவது பாலவ அரசன் |
| (iv) | குஜுல கட்பிசஸ் | D | இந்தியா மீது படையெடுத்த ஹுணத் தலைவன் |
| (v) | கொண்டோபர்னேஸ் | E | இந்தியாவின் முதலாவது யுயெ - சீ அரசன் |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

18. 

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | அகர்மன் | A | யக்ஞம் செய்யாமை |
| (ii) | அதேவசு | B | பிராமணருக்கு எதிரான |
| (iii) | அப்பிரமன் | C | தேவர்களுக்கு எதிரான |
| (iv) | அயஜேவன் | D | விரதங்களை மேற்கொள்ளாமை |
| (v) | அவ்ரத | E | வைதீகச் சடங்குகளைச் செய்யாமை |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

19. 

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ராவி | A | மதுரா |
| (ii) | யமுனா | B | கன்னோசி |
| (iii) | சிந்து | C | ஹரப்பா |
| (iv) | நர்மதா | D | பாருகச்ச |
| (v) | கங்கை | E | மொஹெஞ்சோதாரோ |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

20. 

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | நாசிக் கல்வெட்டு | A | கௌதமி பாலஸ்ரீ |
| (ii) | ஜுனகார்ட் கல்வெட்டு | B | இரண்டாம் புலிகேசி |
| (iii) | ஹதிகும்பா கல்வெட்டு | C | காரவேல |
| (iv) | ஐகொளே கல்வெட்டு | D | உருத்திரதாமன் |
| (v) | அல்லாஹபாத் பிரசஸ்தி | E | சமுத்திரகுப்தன் |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

● **21 - 25** வரையுள்ள எல்லா வினாக்களினதும் சரியான விடையினைத் தெரிந்து, அதன் **இலக்கத்தினை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

21. **மிலிந்த பஞ்சவின் ஆசிரியர் யார்?**
(1) மிலிந்த (2) புத்தகோச (3) தம்மபால
(4) வசுபந்து (5) நாகசேன (.........)

22. **வச்சிகளின் தலைநகரம் யாது?**
(1) வைசாலி (2) வக்ச (3) மல்ல
(4) கபிலவஸ்து (5) சம்பா (.........)

23. **இருக்கு வேத காலத்துப் போர்க்கடவுள் யார்?**
(1) அக்னி (2) இந்திரன் (3) வாயு
(4) வருணன் (5) பர்ஜன்ய (.........)

24. **தென்னிந்தியாவில் ஆரியப் பண்பாட்டை அறிமுகஞ் செய்தவர் என்று கருதப்படும் முனிவர்**
(1) வால்மீகி (2) அகஸ்தியர் (3) புரந்தரர்
(4) பத்மகுப்தர் (5) ஹேமசந்திரர் (.........)

25. **கரோஷ்டியில் எழுதப்பெற்ற அசோகனின் கல்வெட்டு யாது?**
(1) தௌலி (2) பராபர் (3) சாபஷ்கார்ஹி
(4) கிர்னார் (5) ருமிந்தை (.........)

● **26 - 30** வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

26. **இருக்கு வேத காலம்**
(1) கி.மு. 1500 - 1000 ஆகிய காலப்பகுதியில் இருக்கு வேதப் பாடல்கள் இயற்றப்பட்டன என்று கருதப்படுகின்றன.
(2) ஆனால் கி.பி. முதல் நான்கு நூற்றாண்டுகளில் அவை இறுதி வடிவம் பெற்று எழுத்துருப் பெற்றன.
(3) அக்காலத்துக்குரிய முதன்மையான தேவன் இந்திரன்
(4) புரந்தரன் என்னும் தேவன் ஆரியரின் நகரங்களின் பாதுகாவலன்
(5) இருக்கு வேதகால மக்கள் ஆதியான காலகட்டத்தில் பிரம்மாவர்த்தத்தில் வாழ்ந்தனர். (.........)



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**27.** **மோரியப் பேரரசு**

(1) சந்திரகுப்த மோரியனே மோரிய வம்சத்தின் முதல் அரசனாவான்.
(2) சந்திரகுப்தனின் தலைநகரம் பாடலிபுத்திரம் ஆகும்.
(3) மோரியப் பேரரசு அதன் உன்னத காலத்திலே காபுல் பள்ளத்தாக்கு முதல் இந்தியாவின் தென்முனை வரை பரவியிருந்தது.
(4) இந்தியா பற்றிய விபரங்கள் அடங்கிய மிகப் புராதனமான கல்வெட்டுகள் எழுதப்பட்டது அசோகனின் காலத்துக்கு முன்னைய காலத்திலாகும்.
(5) புஷ்யமித்திர சுங்கனின் கிளர்ச்சியோடு மோரியப் பேரரசு முடிவடைந்தது. (.........)

**28.** **குப்தரின் நிர்வாகம்**

(1) உத்தராபதம், தக்சிணாபதம் ஆகியன குப்தரின் அதிகாரிகள் மூலம் நிர்வாகம் செய்யப்பட்டன.
(2) அது மத்தியமாக்கும் நிர்வாக முறையாகும்.
(3) அரசனே அரசினதும் நிர்வாகத்தினதும் அதிபனாக விளங்கினான்.
(4) குப்தப் பேரரசு வுக்தி, விஷய ஆகிய பிரதானமான நிர்வாகப் பிரிவுகளைக் கொண்டிருந்தது.
(5) 'மந்திரி பரிஷத்' என்னும் மந்திரிசபை அரசனுக்கு உதவி புரிந்தது. (.........)

**29.** **சுவன் - சாங்**

(1) சுவன் - சாங் ஒரு சீனத் துறவி ஆவார்.
(2) ஹர்ஷவர்த்தனனின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு வந்த அவர் கன்னோசியில் நடைபெற்ற பௌத்த மாநாட்டிலே பங்குபற்றினார்.
(3) மிஹிராகுலனின் நடவடிக்கைகளை அவர் பதிவு செய்துள்ளார்.
(4) அவர் தக்ஷசீலப் பல்கலைக்கழகத்திலே கல்வி பயின்றார்.
(5) பல்லவரின் தலைநகரான காஞ்சிக்கு அவர் போனார். (.........)

**30.** **சோழர் கோயில்கள்**

(1) கர்ப்பக்கிருஹம், அந்தராலம், மண்டபம் என்பனவே சோழரின் கோயில்களின் பிரதான அம்சங்களாகும்.
(2) கோபுரம் சோழர் காலத்துக் கோயில்களுக்கு ஒரு முக்கியமான அமைப்பாகும்.
(3) புகழ்பெற்ற ரதங்களின் கட்டுமானமுறை சோழர் காலத்தில் உற்பத்தியானது.
(4) தஞ்சாவூரிலுள்ள சில சோழர் காலக் கோயில்களிற் சோழ மன்னரின் படிமங்கள் உள்ளன.
(5) சோழ மன்னர்கள் கோயில்களுக்குப் பெருஞ்செல்வங்களை நன்கொடையாக வழங்கினார்கள். (.........)

- **31 - 35** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் .................. **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................. **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **4** எனவும்

**ஒரு விடை மட்டும்** அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**31.** **சமண சமயம்**

(A) வர்த்தமான மகாவீரர் சமணரின் முதலாவது தீர்த்தங்கரர் ஆவார்.
(B) சுவேதாம்பரர், திகம்பரர் ஆகியோர் சமணர்களுக்கிடையிலுள்ள பிரதானமான பிரிவினர்கள்.
(C) உலகத்தை இறைவன் படைத்தான் என்றும் அதனைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளான் என்றும் சமணர் நம்பவில்லை.
(D) சுவேதாம்பரர் பெண்களைத் தங்கள் பிரிவிலே சேர்த்துக் கொண்டனர். (.........)

**32.** **சாதவாகனர்**

(A) சாதவாகன இராச்சியம் கிழக்குத் தக்கிணத்தில் உருவாக்கப்பட்டது.
(B) புராணங்கள் சாதவாகனரை ஆந்திரர் எனக் குறிப்பிடுகின்றன.
(C) முதலாம் சாதகர்ணியே சாதவாகன இராச்சியத்தில் முதலாவது அரசனாவான்.
(D) தக்கிணத்திலிருந்து கண்வர்களை வெளியேற்றியபின் அங்கு சாதவாகனர் அதிகாரம் பெற்றனர். (.........)

Department of Examinations Sri Lanka

[பக். 5 ஐப் பார்க்க

**33.** காளிதாசர்
(A) விக்கிரமாதித்தனின் அரண்மனையிலிருந்த நவரத்தினங்களில் ஒருவராக காளிதாசர் விளங்கினார்.
(B) காளிதாசர் தக்ஷிணாபதத்தில் வாழ்ந்தார்.
(C) குமாரசம்பவம் காளிதாசரின் காவியங்களில் ஒன்றாகக் கொள்ளப்படும்.
(D) விக்ரமோர்வசி என்னும் நாடகம் முதலாம் குமாரகுப்தனின் வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டது.
(.........)

**34.** புஷ்யபூதி வம்சம்
(A) பிரபாகரவர்த்தனன் தனேசரிலிருந்து ஆட்சி புரிந்த புஷ்யபூதி வம்சத்தின் முதல் அரசனாவான்.
(B) பிரபாகரவர்த்தனனின் மகனாகிய ஹர்ஷவர்த்தனன் சசாங்கனைத் துரத்திய பின்பு கன்னோசியைக் கைப்பற்றினான்.
(C) ஹர்ஷவர்த்தனனின் சகோதரியை மௌகரி வம்சத்துக் கிரகவர்மன் திருமணம் செய்தான்.
(D) ஹர்ஷவர்த்தனனுடைய படையெடுப்புக்களைப் பற்றி விரிவான விவரங்களைப் பாகியன் குறிப்பிடுகின்றார்.
(.........)

**35.** பல்லவர்கள்
(A) கி.பி. 3 ஆம், 4 ஆம் நூற்றாண்டுகளில் பல்லவ இராச்சியம் தோன்றிவிட்டது போலத் தெரிகின்றது.
(B) சமுத்திரகுப்தன் தோற்கடித்த அரசர்களில் பல்லவனும் ஒருவனென்று அல்லாஹபாத் பிரசஸ்தி குறிப்பிடுகின்றது.
(C) பல்லவ அரசன் ஒருவரின் ஆதரவோடு மானவர்மன் அநுராதபுரத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது.
(D) ரதங்கள் என்று சொல்லப்படும் இந்துக் கோயில்களைப் பல்லவர்களே கட்டினார்கள். (.........)

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் **இரண்டு** கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36.** | மெகஸ்தினிசினுடைய இந்திகா மோரியரின் ஆட்சி பற்றிய முக்கியமான தகவலை வழங்கும் ஒரு மூலாதாரமாகும். | மெகஸ்தினிஸ் பாடலிபுத்திரத்திலிருந்த கிரேக்க தூதுவராவார். | (.........) |
| **37.** | குப்தர் காலத்தில் வட இந்தியாவிலே ஒரு தேரவாத பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட்டது. | பௌத்த படிமம் குப்தர் காலத்திலே உற்பத்தியானது. | (.........) |
| **38.** | நாலந்தா பல்கலைக்கழகம் பிரசித்திபெற்ற ஒரு சர்வதேச பௌத்த நிறுவனமாகும். | பாகியன் என்னும் சீனப் பௌத்த துறவி நாலந்தா பல்கலைக்கழகத்திலே படித்தார். | (.........) |
| **39.** | இரண்டாம் பாண்டியப் பேரரசின் மன்னர்களில் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் முதன்மையானவன். | ஆனால் அவனால் காஞ்சியைக் கைப்பற்ற முடியவில்லை. | (.........) |
| **40.** | ஹர்ஷவர்த்தனனுக்குப் பின்பு கன்னோசியில் ஆட்சி புரிந்தவர்களில் ஒருவன் யசோவர்மன். | யசோவர்மனுக்குப் பின்பு கன்னோசியில் மேலாதிக்கம் பெறுவதற்கு குருஜர - பிரதிகாரர், பாலர், ராஷ்டிரகூடர் என்போர் இடையில் போர்கள் நடைபெற்றன. | (.........) |

* *

Department of Examinations Sri Lanka

[பக். 6 ஐப் பார்க்க

0946

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

**25-A T II**

## இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1206 வரை

**அறிவுறுத்தல்கள்:**

✳ **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

**1.** உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்திலே மேலே தரப்பட்ட **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் எவையேனும் **இரண்டுக்குச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள்** எழுதுக.
(i) தக்ஷசீலம் (ii) ஹரப்பா
(iii) பாருகச்ச (iv) சாஞ்சி
(v) விந்திய மலைத்தொடர் (vi) தஞ்சாவூர்
(vii) தாம்ரலிப்தி (viii) கிருஷ்ணா நதி
*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; ஒவ்வொரு சுருக்கமான குறிப்புக்கும் **05** புள்ளிகள்)*

**2.** மொஹெஞ்சோதாரோ - ஹரப்பா நாகரிகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகளை விளக்குக. *(14 புள்ளிகள்)*

**3.** பிரம்மாவர்த்தத்திலிருந்து ஆர்யாவர்த்தத்திற்குக் குடியிருப்புகள் பரவிய பொழுது ஏற்பட்ட சமூக, பண்பாட்டு மாற்றங்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**4.** மோரியரின் நிர்வாக முறைமையின் பிரதானமான அம்சங்களை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

**5.** "கனிஷ்கன் குஷாண வம்ச அரசரில் முதன்மையானவன்."
(i) கனிஷ்கனின் இராசதானி யாது? *(01 புள்ளி)*
(ii) குஷாணர் காலத்தில் வாழ்ந்த **இரண்டு** பிரதானமான பௌத்த பிக்குகளின் பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iii) இந்திய அரசியலில் குஷாணரின் முக்கியத்துவத்தை விளக்குக. *(03 புள்ளிகள்)*
(iv) "பண்பாட்டு, சமய வளர்ச்சிகளில் கனிஷ்கன் கொண்டிருந்த பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது." இக்கூற்றினைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

**6.** குப்தப் பேரரசின் தளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்குமான பிரதான காரணங்கள் யாவை? *(14 புள்ளிகள்)*

**7.** "குப்தர்களின் பின்பு ஹர்ஷவர்த்தனனின் ஆட்சிக் காலத்தில் வட இந்தியா முக்கியத்துவம் பெற்றது."
(i) ஹர்ஷவர்த்தனனின் ஆட்சிக்காலம் பற்றிய விவரங்களைக் கூறும் நூலொன்றின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
(ii) அவனுடைய ஆட்சிக் காலத்தில் பௌத்த மாநாடுகள் கூடிய **இரண்டு** இடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iii) கன்னோசியில் எவ்வாறு அவன் அரச பதவி பெற்றான் என்பதைச் சுருக்கமாக விவரிக்குக. *(03 புள்ளிகள்)*
(iv) வட இந்தியாவிலே ஆதிக்கத்திலும் பண்பாட்டிலும் கன்னோசி முதன்மை பெறுவதில் ஹர்ஷவர்த்தனன் கொண்டிருந்த பங்கினை ஆராய்க. *(08 புள்ளிகள்)*

**8.** **(A)** பகுதிக்கு **அல்லது** **(B)** பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.
**(A)** கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் மேற்கிந்தியாவிலும் வடமேற்கு இந்தியாவிலும் ஏற்பட்ட அராபியர் படையெடுப்புக்களைப் பற்றி நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*
**(B)** முதலாம் இராசராசன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோரின் காலத்திற் சோழர் ஆதிக்கம் வளர்ச்சி பெற்றமையிலுள்ள பிரதானமான கட்டங்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**9.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
(i) செலியூக்கஸ் நிக்கேற்றர் (ii) கண இராச்சியம்
(iii) சங்க இலக்கியம் (iv) வடமேற்கு இந்தியாவிலே சகரின் ஆட்சி
*(ஒவ்வொன்றுக்கும் 07 புள்ளிகள் வீதம்)*

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

AL/2017/25-A/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ඉතිහාසය II
வரலாறு II
History II

**25-A T**

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................




Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka